**S. M. FERNANDO**
Opticians
Sight Tested Prescriptions
Accurately Dispensed
★ ★ ★
580, HOSPITAL ROAD,
Near Bank of Ceylon
JAFFNA.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

கண் வைத்திய நிபுணர்கள்
சிபார்சு செய்யும்
கண்ணாடிகளைச்
சரியாகக் கொடுப்பவர்கள்
★ ★ ★
எஸ். எம். பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
இலங்கை வங்கி அருகாமை
யாழ்ப்பாணம்.

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 புரட்டாதி 09 புதன்கிழமை (25-09-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 295

முச்சந்தி முரளி



அப்ப...... சபையை விளை யாட்டு மைதானம் எண்டு நினைச்சிட்டினம் போலை !

## கடற்படையால் துன்புறுத்தப்பட்ட

# 21 இந்திய மீனவர்களும் புலிகளின் பாதுகாப்பில்!

## மற்றைய மூவரைக் காணவில்லை

யாழ்ப்பாணம், செப்டெம்பர் 25

ஸ்ரீலங்கா கடற்படையினரால் துன்புறுத்தப்பட்டு நடுக்கடலில் தூக்கி வீசப்பட்ட 24 இந்திய மீனவர்களில் 21 பேர் தற்போது யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளினால் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

மற்றைய மூன்று மீனவர்களினதும் நிலை என்னவென்று தெரியவில்லை.

கடந்த வியாழனன்று இராமேஸ்வரம் கடற்பகுதியிலிருந்து நான்கு படகுகளில் தொழிலுக்குப் புறப்பட்ட இந்த மீனவர்களை அன்றிரவு 10 மணியளவில் கச்சதீவுப் பகுதியில் வைத்து ஸ்ரீலங்கா கடற்படையினர் வழிமறித்துத் தாக்கியதாகக் கூறப்படுகிறது.

பின்னர் அவர்களை தமது

[3 ஆம் பக்கம் பார்க்க]

## குற்றச்சாட்டுகளை சந்திக்க தயார் என்கிறார் பிரேமா

கொழும்பு, செப். 25

என்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களைச் சந்திக்க நான் தயாராக உள்ளேன். எதனையும் ஒளிப்பதற்கு நான் முனையவில்லை.

இவ்வாறு ஜனாதிபதி திரு. பிரேமதாசா நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்து உரைநிகழ்த்துகையில் அவர் மேலும் கூறியதாவது:-

தற்போதைய அரசமைப்புச் சட்டத்தை அனுசரிக்க அனைவரும் கடப்பாடு கொண்டுள்ளனர்.

அரசமைப்புச் சட்டம் ரீதியாக மாற்றும் வரை அதனை அனுசரிக்க வேண்டிய கடப்பாடு அனைவருக்கும் உண்டு.

எனக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டுள்ள அரசியல் குற்றப் பிரேரணை இன்னும் உத்தியோகபூர்வமாகப் பிரகடனப்படுத்தப்படவில்லை.

நான் எவ்வித குற்றமும் செய்யவில்லை. இதனை அனைவரும் நன்கறிவர்.

எனக்கெதிரான அரசியல் குற்றப் பிரேரணை என்னை

[3 ஆம் பக்கம் பார்க்க]

## திலீபன் நினைவு நிகழ்வுகள் நேற்று நல்லூரில் ஆரம்பம்

### பெரும் திரளான மக்கள் உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், செப். 25

தியாகி திலீபன் நல்லூரில் உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்த—அதே இடத்தில் நேற்று அந்தத் வீரத் திருமகனின் நான்காம் ஆண்டு நினைவாக நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

நினைவு நிகழ்ச்சிகள் தொடர்ந்து இன்றும், நாளையும் அங்கு நடைபெறும்.

தியாகி திலீபன் உண்ணா நோன்பிருந்த சமயம், மேடை அமைக்கப்பட்டிருந்த அதே இடத்தில், தற்போதும் விசேட மேடை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

அந்த மேடைக்கு முன்பாக நேற்று பெரும் திரளான மக்கள் திலீபனின் நினைவாக உண்ணாவிரதம் அனுஷ்டித்தனர்.

திலீபனின் தந்தை திரு இராசையா தீபம் ஏற்றி உண்ணா விரதத்தை ஆரம்பித்து வைத்தார்.

உண்ணாவிரதத்தில் பாடசாலை மாணவ, மாணவியர் மற்றும் பெண்கள், முதியவர்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## மணலாறு போரின் ஆபத்து: நமது மக்கள் உணரவில்லை!

### திலீபன் நினைவுக் கூட்டத்தில் திருமலை ரூபன் கவலை

யாழ்ப்பாணம், செப். 25

தென் தமிழீழத்தையும், வட தமிழீழத்தையும் அறுத்துத் துண்டாடிவிடத் திட்டமிட்டு, இனவாத அரசு மணலாற்றில் தனது முழு இராணுவத் தகுதியையும் திரட்டிப் போராடுகிறது.

ஆனால் அந்த முக்கியமான போர் குறித்து இங்குள்ள மக்கள் உணர்ந்ததாகத் தெரியவில்லை. அதன் தாக்கத்தைப் புரிந்துகொள்ளவில்லை.

மணலாறு பறிபோனால் பெரும் ஆபத்து எம்மைச் சூழ்ந்துவிடும். ...

உணர்ந்து மக்கள் தமது பங்களிப்பை உரிய அளவில் வழங்க வேண்டும்.

— இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார் தமிழீழ விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## ஜனாதிபதி பிரேமாவுக்கு பைத்தியக்காரப் பட்டம்!

கொழும்பு, செப். 25

ஜனாதிபதி பிரேமதாஸா நேற்று நாடாளுமன்றில் உரையாற்றிய போது எதிர்க்கட்சி எம். பிக்கள் ''வெட்கம், வெட்கம்'' என்று கோஷமிட்டனர்.

ஜனாதிபதியை ''பைத்தியக்காரன்'', ''ஜோக்கர்'' போன்ற தரக்குறைவான வார்த்தைகளாலும் எதிர்க்கட்சி எம். பிக்கள் வைதனர்.

ஆளும் கட்சி எம். பிக்கள் பெரும்பாலும் அமைதி காத்தனர். அவர்கள் அவ்வப்போது ஜனாதிபதியை உற்சாகப்படுத்தும் வகையில் கைதட்டி ஆரவாரம் செய்த வண்ணம் இருந்தனர். [உ-எ]

## நேரடி ஒலிபரப்பு நிறுத்தம்

கொழும்பு, செப். 25

நேற்று நாடாளுமன்றில் ஜனாதிபதி உரை நிகழ்த்திக் கொண்டிருந்த போது அதனைக் குழப்பும் விதத்தில் எதிர்க்கட்சியினர் எழுப்பிய அநாகரிகமான கோஷங்கள் வானொலி அஞ்சலில் எதிரொலித்தன.

அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி உரை தொடர்பான வானொலியின் நேரடி அஞ்சல் இடை நிறுத்தம் செய்யப்பட்டது.

ஆனால் அஞ்சல் இடைநிறுத்தப்பட்டதற்கான காரணத்தை இலங்கை வானொலி தெரிவிக்கவில்லை.

ஜனாதிபதியின் நாடாளுமன்ற உரை இம்முறை தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்பப் படவில்லை என்பது தெரிந்ததே. (உ-எ)

## லலித்தை மறைமுகமாக தாக்கிப் பேசினார் பிரேமா!

ஜனாதிபதி பிரேமதாஸா தனது பேச்சில், இஸ்ரவேல் பல்கலைக்கழகத்தில் பணியாற்றியவர்களும் இஸ்ரவேலின் உளவுப்படையான மொஸாட்டைச் சேர்ந்தவர்களும்தான் தனக்கு எதிரான சதியில் ஈடுபட்டுள்ளனர் என்று குற்றஞ்சாட்டினார்.

முன்னாள் அமைச்சர் அத்துலத் முதலி, இஸ்ரவேல் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணிபுரிந்தவர் என்பதால், அவரை மறைமுகமாகத் தாக்கியே திரு. பிரேமதாஸா இக்கருத்தை வெளியிட்டார் என்று சொல்லப்படுகிறது. (உ-எ)

## பிரேரணை மீதான விவாதம்; திகதி இன்னும் முடிவில்லை

கொழும்பு, செப். 25

ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு எதிரான குற்ற விசாரணைப் பிரேரணை மீதான விவாதத்தை எப்போது நடத்துவது என்பது குறித்து தாம் இன்னமும் முடிவு செய்யவில்லை என்று சபாநாயகர் முஹம்மது நேற்று அறிவித்தார். (உ-எ)

## அவசரகாலச் சட்ட நீடிப்பு விவாதம் ஆரம்பமானது!

நாடாளுமன்றக் கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்து ஜனாதிபதி உரை நிகழ்த்திய பின்னர், நேற்றுப் பிற்பகலில் அவசரகாலச் சட்ட நீடிப்பு பிரேரணை மீதான விவாதம் நாடாளுமன்றில் ஆரம்பமானது.

நாடாளுமன்ற விவகார அமைச்சர் வின்சென்ற் பெரேரா பிரேரணையை சமர்ப்பித்துப் பேசினார். தகவல், கலாசார அமைச்சர் லொக்குபண்டார உட்பட பலர் உரை நிகழ்த்தினர்.

பின்னர் நேற்று மாலை அளவில் சபை ஒத்திவைக்கப்பட்டது. சபை மீண்டும் இன்று காலை 8-30 மணிக்கு கூடும் போது அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான விவாதம் தொடரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. [உ-எ]

## பிரேமா கஷ்டப்பட்டார்!

கொழும்பு, செப். 25

எதிர்க்கட்சி எம். பிக்களின் கூச்சல் குழப்பத்துக்கு மத்தியில் தமது உரையை செவிமடுக்கச் செய்வதற்காக ஜனாதிபதி பிரேமதாஸா மிகவும் கஷ்டப்பட்டார் என்று பி.பி.ஸி. கொழும்புச் செய்தியாளர் நேற்றுத் தெரிவித்தார்.

குறுக்கீடுகளினால் ஜனாதிபதி பிரேமா கலவரமடைந்தவராகக் காணப்பட்டார் என்றும் பி. பி. ஸி. தெரிவித்தது.

## சபைக்குள் சுவரொட்டிகள்

கொழும்பு, செப். 25

நேற்று ஜனாதிபதி உரைக்காக நாடாளுமன்றம் கூடிய போது எதிர்க்கட்சி எம். பிக்கள் நாடாளுமன்றக் கட்டடத்திற்குள் பல சுவரொட்டிகளையும் எடுத்து வந்திருந்தனர். அந்தச் சுவரொட்டிகளில் ஜனாதிபதி குறித்தும் ஆளும் கட்சி குறித்தும் தரக் குறைவாக எழுதப்பட்டிருந்தது.

சில எம். பிக்கள் பதாகைகளை (பனர்களை) உயரப் பிடித்து அவற்றை அசைத்த வண்ணம் கூச்சலிட்டனர்.

## சூதாட்ட மோசடி நபரின் படங்களும் சபைக்கு வந்தன

கொழும்பு, செப். 25

ஜனாதிபதி பிரேமதாஸாவின் உறவினர்களும், நண்பர்களும் சூதாட்ட மோசடி நபரான ஜோ சிம்முடன் இணைந்து நிற்கும் பெரிய படங்களும் நேற்று நாடாளுமன்றத்துக்கு எடுத்து வரப்பட்டன.

நாடாளுமன்றத்தில் உரைநிகழ்த்திய ஜனாதிபதி பிரேமதாஸா, எதிர்க்கட்சி எம். பிக்களின் குறுக்கீடுகளுக்கு பதிலளிக்க முற்பட்டபோது அவர்கள் இந்தப் படங்களை தூக்கிக் காட்டி கூச்சலிட்டு, ''வெட்கம், வெட்கம்'' என்று சத்தினர். (உ-3)

## குற்றம் சுமத்தப்பட்டுள்ள நிலையில் ஜனாதிபதி சபையில் உரை நிகழ்த்தலாமா?

### எதிர்க்கட்சி எம். பிக்கள் அவரிடம் கேள்வி

கொழும்பு, செப். 25

''அரசியல் குற்ற விசாரணைப் பிரேரணை ஒன்று ஜனாதிபதிக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டுள்ள தருணத்தில் நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி உரை நிகழ்த்த முடியுமா?''

—நேற்று நாடாளுமன்றில் ஜனாதிபதி உரை நிகழ்த்திய போது எதிர்க்கட்சி எம். பிக்கள் பலர் அடிக்கடி குறுக்கிட்டு இவ்வாறு கேள்வி எழுப்பினர்.

எனினும் ஜனாதிபதி பிரேமதாஸா இக்கேள்விகளுக்கு பதிலளிக்காமல் தமது ஒரு மணி நேர உரையை விடாது நிகழ்த்தி முடித்தார். [உ-எ]

## பிரேரணை செயலிழக்கவில்லை; பிரேமதாஸா ஒப்புக் கொண்டார்!

கொழும்பு, செப். 25

தமக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டிருக்கும் குற்ற விசாரணைப் பிரேரணை குறித்து விரைவில் முடிவு காணுமாறு ஜனாதிபதி பிரேமதாஸா சபாநாயகர் முகம்மதுவை வற்புறுத்திக் கேட்டுக் கொண்டார்.

நேற்று நாடாளுமன்றத்தில் நிகழ்த்திய உரையின் போதே அவர் இவ்வாறு கேட்டார்.

இவ்வாறு சபாநாயகரைக் கேட்டுக் கொண்டதன் மூலம் தமக்கு எதிரான பிரேரணை செயலிழந்து விடவில்லை என்பதை ஜனாதிபதியே ஒப்புக் கொண்டிருக்கிறார் என்று அவதானிகள் கருத்து வெளியிட்டனர். [உ-எ]

## லலித், பிரேமச்சந்திரா இன்று சபையில் உரை!

கொழும்பு, செப். 25

முன்னாள் அமைச்சர்களான லலித் அத்துலத் முதலி, பிரேமச்சந்திர ஆகியோர் தாம் அமைச்சர் பதவிகளை இராஜினாமாச் செய்ததற்கான காரணங்களைத் தெரிவித்து இன்று நாடாளுமன்றில் உரையாற்றுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டிற்குள் மொஸாட் படையை அழைத்து வந்தது லலித் அத்துலத் முதலியே என்று ஜனாதிபதி பிரேமதாஸா தெரிவித்த குற்றச்சாட்டு உட்பட பல்வேறு விடயங்களுக்கு லலித் அத்துலத் முதலி இன்று நாடாளுமன்றில் பதிலளிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. [உ-எ]

## ஜனாதிபதியிடம் மன்னிப்பு கோரினார் சபாநாயகர்

கொழும்பு, செப். 25

நேற்று நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி உரை நிகழ்த்திக் கொண்டிருந்தபோது எதிர்க்கட்சி எம். பிக்கள் கொடுத்த தொந்தரவுக்கு தாம் மன்னிப்புக் கோருவதாக சபாநாயகர் எம். எச். முஹம்மது ஜனாதிபதி பிரேமதாஸா

[3 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல இன இளம் பசு விற்பனைக்குண்டு. தொடர்பு: வி. தாகராத்தினம், கலைப் பாடசாலை லேன், [சந்தை பின்புறம்] திருநெல்வேலி. [18234]

Dobermann Pincher x Rhodesian Ridgeback நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: நல்லூர் வீடியோ சென்ரர், 19, மருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தியடி, நல்லூர். [18240]

## மணப்பெண் தேவை

யாழ். இந்து குற்றமுள்ள 31 வயது B.Sc சிவில் பொறியியலாளருக்கும், குற்றமுள்ள 36 வயது P.H.Dக்கும், 44 வயது அரசாங்க உத்தியோகத்தருக்கும் தேவை. மங்கள ஏஜென்சி கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். [18242]

## மணமக்கள் தேவை

யாழ். இந்து செவ்வாய்க் குற்றமுள்ள Air Ceylon 31 வயது மெக்கானிக்கல் பொறியியலாளருக்கு, டாக்டர், பொறியியலாளர், கணக்காளர், B.Sc. மணப்பெண்ணும், 31 வயது மணப்பெண்ணுக்கு கனடாவை விரும்பும் A/L சித்தியடைந்த மணமகனும் தேவை. மங்கள ஏஜென்சி, யாழ்ப்பாணம். [18241]

## இலவச திருமண சேவை

கனடாவில் தொழில் பார்க்கும் அச்சுவினி நட்சத்திர 33 வயது மணமகளுக்கு மணமகன் தேவை. கனடா அனுப்ப விரும்புவோர் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை சந்திக்கவும். ஜேர்மனி, சுவிஸ் ஆகிய இடங்களில் மணமக்கள் உண்டு. கணக்காளர்கள், டாக்டர்கள், பொறியியலாளர்கள் குறிப்புகள் உண்டு. விமலா துரைராஜா, 058/8, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். [4310]

## சோதிடம்

கல்வித்தடை, விவாகத்தடை, தொழில்தடை மற்றும் எல்லாவித கஷ்டங்களும் நீங்கி அதிர்ஷ்டத்துடன் வாழ நேரில் வரவும். ஸ்ரீ சக்தி கணேஷ உபாசகர், 146, பருத்தித்துறை றோட், [ஸ்ரீ வீரமாகாளி கோவிலடி] நல்லூர். [18196]

## ரைப்ரைட்டர்

Typewriters தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும், தமிழ் - ஆங்கில தட்டச்சு வேலைகளுக்கும். பியூட்டோ, 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (வி/0533)


# இராணுவம் சூடு; இளைஞர் காயம்

யாழ்ப்பாணம், செப் 25

மாடு பார்க்கச் சென்ற இளைஞர் ஒருவர் இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் காயமடைந்தார்.

தாளையடிப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை நடந்த இந்தச் சம்பவத்தில் தருவில்லைக்குளத்தைச் சேர்ந்த சந்திரபோஸ் ஜெகநாதன் (வயது 23) என்பவரே காயமடைந்தார்.

இவர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஓ-15)


# நினைவஞ்சலி

செல்வன்

## கமலநாதன் நந்தராஜ்

தோற்றம்: 25-09-1990

மறைவு: 26-04-1991

மறைந்த எம் மழலைச் செல்வத்தின் பிறந்த நாளான இன்று உன்னை நினைவு கூர்ந்து எம் அஞ்சலியைச் சமர்ப்பிக்கின்றோம்.

கமலநாதன் - யோகேஸ்வரி (பெற்றோர்),
த. ஆறுமுகம் (பேரன்)
மற்றும் குடும்பத்தவர்கள்.

பாடசாலை வீதி,
இறுகால் மடம்,
ஆனைக்கோட்டை. [18244]

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மாவீரர்களின் திருஉருவப் பட திரைநீக்க வைபவமும், தியாகி திலீபனின் 4 ஆம் ஆண்டு, 11 ஆம் நாள் வடமராட்சிப் பிரிவுக்கான அஞ்சலிக் கூட்டமும் நடைபெறும்.

## தியாகி திலீபன்

காலம்: 25 9 91 புதன்கிழமை பி. ப. 5-00 மணி
இடம்: அச்சுவேலி மகா வித்தியாலயம்

அனைத்து மக்களும் அணி திரண்டு வருக!

(18229) அச்சுவேலி வர்த்தகர் சங்கம்.


# மணலாறில் 3 நாள் சண்டையில் 16 வீர வேங்கைகள் களப்பலி!

யாழ்ப்பாணம், செப் 25

மணலாறு மாவட்டத்தில் நடந்து வரும் மோதல்களில் கடந்த மூன்று நாட்களில் 16 வீரவேங்கைகள் களப்பலியானார்கள்.

நேற்று வசி [சியாமளா தேவி ஆனந்தம் - தொண்டமானாறு], குமரன் [திலைனார் உதயகுமரன் - வவுனிக்குளம்], ஆகிய இருவரும்—

நேற்று முன்தினம் விவேக் [மார்க்கண்டு மகேந்திரன் - கரவெட்டி], ரூபி [செல்வராணி தம்பையா - வரணி], மனோஜ் [ரத்தினம் சிவகுமார் - ஓமந்தை], ரஜிந்தன் [ஆறுமுகம் செல்வரட்ணம் - முல்லைத்தீவு] ஆகிய நால்வரும்—

கடந்த ஞாயிறன்று டாணி [சின்னத்துரை சந்தகுமார் - உடுத்துறை], சங்கீதா [வசந்தகுமாரி நடராசா - நவாலி], திபாகர் [மாணிக்கம் மகேஸ்வரன் - துறைநீலாவணை], வினோத் [இராசையா யுவராசா - வத்திராயன்], சனத் செபஸ்தியாம் பிள்ளை ஜெயசீலன் - முள்ளியான்].

தர்மிளா [மாலா மயில்வாகனம் - ஆழியவளை], சுமங்கலி [மல்லிகா விஜயரட்ணம் - இயக்கச்சி], ராகினி [குயில்பத்மா தியாகராசா - இராசாவின்தோட்டம்], ரூபவதி [வசந்தி மகாலிங்கம் - வழுங்காவில்], தியூட்டன் [சோமசேகரம்இராஜயோகம் - ஓமந்தை] ஆகிய பத்துப் பேரும் வீரமரணமடைந்தனர். [ஒ]


அரசாங்க சேவையிலும், மாகாண அரசாங்க சேவையிலும் எழுதுனர் தரங்களுக்கு அமைய அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கான

# போட்டிப் பரீட்சை-1991

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள திணைக்களங்களில் எழுதுனர் தரங்களில் உள்ள வெற்றிடங்களுக்கு அமைய அடிப்படையில் நியமனம் செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் / ஆணையாளரால் நடாத்தப்படும் எழுத்து மூலமான பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பதாரர்களிடம் இருந்து திறமை அடிப்படையிலும், இன விகிதாசாரப் பிரகாரமும் பொருத்தமானவர்கள் அரசாங்க சேவையிலும், மாகாண சேவையிலும் உள்ள பதவிகளுக்கு அமைய, அடிப்படையில் நியமனம் செய்வதற்கு தெரிவு செய்யப்படுவர். இப்பரீட்சை முல்லைத்தீவு மாவட்டத்தில் மாத்திரம் நடைபெறும். இப்பரீட்சைப் பெறுபேறுகளின் படி எல்லா வெற்றிடங்களையுமோ அல்லது எவற்றையேனும் நிரப்பாது விடும் அதிகாரம் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபருக்கு உண்டு. இந் நியமனங்கள் நிரந்தரமாக்கப்படமாட்டா. நிரந்தர நியமனம் பெற விரும்புவோர் அகில இலங்கை ரீதியில் நடைபெறும் போட்டிப் பரீட்சைக்கு தோற்றி சித்தியடைய வேண்டும்.

3. முல்லைத்தீவு மாவட்டத்தில் நிரந்தரமாக வசிப்பவர்கள் மாத்திரமே இப் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம். பின்வரும் ஆவணங்கள் மூலம் விண்ணப்பதாரர் முல்லைத்தீவில் நிரந்தரமாக வசிப்பவர்கள் என்று கருதப்படுவர்.

(1) விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழின்படி அவர் முல்லைத்தீவு மாவட்டத்தில் பிறந்தவரென்று குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

அல்லது

(2) தேர்தல் இடாப்பில் அவருடைய பெயர் இருத்தல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் க.பொ.த. (சாதாரணம்) அல்லது தே. பொ. க. சா. பரீட்சைக்கு முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பாடசாலையில் கல்வி பயின்று சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் மாதிரிப்படிவத்தைப்போல் தயாரித்து விண்ணப்பிக்க வேண்டும்.

4. தகைமைகள்:

எண் கணிதம் / கணிதம் / வர்த்தக எண் கணிதம், மொழி / இலக்கியம் ஆகியவற்றில் திறமைச் சித்திகளையும் உள்ளடக்கி 4 திறமைச் சித்திகளுடன் அல்லது 4 பி தரச் சித்திகளுடன் 6 பாடங்களில் கல்வி பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சை / தேசிய பொதுக் கல்வி சான்றிதழ்ப் பரீட்சையில் சித்தி. மேலே குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் 4 திறமைச் சித்திகளுடன் அல்லது 4 பி தரச் சித்திகளுடன் ஒரே தடவையில் 5க்கு குறையாத பாடங்களில் சித்தியடைந்த பின் இரண்டாம் தடவையில் 6-ம் பாடத்தில் சித்தியடைந்து பரீட்சையைப் பூர்த்தி செய்தவர்களும் இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவர்களாவர்.

விண்ணப்பதாரி ஓர் இலங்கை பிரஜையாய் இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் நல்ல தேகாரோக்கியமும், நற்குணமும் உடையவராய் இருத்தல் வேண்டும்.

வயது: விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும், 40 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

5. பரீட்சைத் திட்டம்:-

அபேட்சகர்கள் பரீட்சையில் இரண்டு வினாப்பத்திரங்களுக்கு தோற்றுமாறு வேண்டப்படுகின்றனர்.

(I) மொழித் தேர்ச்சி (ஒன்றரை மணித்தியாலம்) பல்விருப்பு தேர்வுப் புறப்பொருள்சார் வகை வினாத்தாள் ஒன்று. இது தொடர்புடைய மொழித்தேர்ச்சியை பரீட்சிப்பதற்கு வடிவமைக்கப்பட்டுள்ளது.

(II) உளச்சார்புச் சோதனை (ஒன்றரை மணித்தியாலம்) பல்விருப்புத் தேர்வுப் புறப்பொருள்சார் வகை வினாத்தாள். இது கணித உளச்சார்புகளையும் பொது விவேகத்தையும், பரீட்சிப்பதற்கான வடிவமைக்கப்பட்ட பொது வினாத்தாள் ஆகும்.

இப்பரீட்சை மூன்று மொழி மூலங்களிலும் நடத்தப்படும். (தமிழ் / ஆங்கிலம் / சிங்களம்)

6. பரீட்சைக் கட்டணங்கள்:-

விண்ணப்பதாரர் பரீட்சைக் கட்டணமாக முல்லைத்தீவு அரசாங்க அதிபரென பெற்ற ரூபா 100/-க்கான காசுக்கட்டளையை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும். இப்பணம் எக்காரணம் கொண்டும் மீளளிக்கப்படமாட்டாது.

7. சம்பளத் திட்டம்:-

வேலை செய்யும் நாளுக்கு ரூபா 55/20 என்ற விகிதத்தில் வேதனமும் அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட படிகளும் வழங்கப்படும்.

8. விண்ணப்பத்தைக் கொண்டுள்ள கடிதவுறையின் இடதுபக்க மேல்மூலையில் "அரசாங்க சேவையிலும், மாகாண அரசாங்க சேவையிலும் எழுதுனர் தரங்களுக்கான போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பம்" என்பதனைக் குறிப்பிடவும்.

அபேட்சகர்கள் பரீட்சை மண்டபத்தில் தங்களுடைய அடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுவர்.

பூரண விவரங்களைக் கொண்டிராத விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

விண்ணப்பத்தில் உள்ள அபேட்சகரின் ஒப்பம் பின்வருவோர்களில் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். அரசாங்க பாடசாலை அதிபர், சமாதான நீதிவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, நொத்தாரிசு, படைத்தாங்கு சேவைகளின் ஆணைபெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் பிரிவில் அரசாங்க வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்ட அதிகாரி, ஆண்டொன்றுக்கு 24,000/- ரூபாவிற்கு குறையாத திரட்டிய சம்பளம் பெறுபவரும் அரச சேவையில் நிரந்தர பதவி வகிப்பவருமானவொருவர்.

9. விண்ணப்பம் பின்வரும் முகவரிக்கு 1991 அக்டோபர் 15 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

அரசாங்க அதிபர் / மாவட்ட ஆணையாளர்,
கச்சேரி,
முல்லைத்தீவு.

பரீட்சைத் திகதி பின்னர் பத்திரிகைமூலம் அறிவிக்கப்படும். அரசாங்க அதிபரின் பெயருக்கு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

10. இந்த அறிவித்தலில் கொடுக்கப்படாத எந்த விடயமும் நியமிப்பு அதிகாரியினால் தீர்மானிக்கப்படும்.

இ. தர்மகுலசிங்கம்,
முல்லைத்தீவு அரசாங்க அதிபரும்,
மாவட்ட ஆணையாளரும்.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

அரசாங்க சேவையிலும், மாகாண அரசாங்க சேவையிலும் எழுதுனர் தரங்களுக்கு அமைய அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கான

## போட்டிப் பரீட்சை - 1991

1. (I) முழுப் பெயர்:-
   (II) முதலெழுத்துக்களுடன் பெயர்:- (திரு / திருமதி / செல்வி)
2. நிரந்தர முகவரி:-
3. பால்:- (ஆண்/பெண்)
4. நீர் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மொழி:- [தமிழ் / ஆங்கிலம் / சிங்களம்]
5. இனம்:- (இலங்கைத் தமிழர் / சிங்களவர் / முஸ்லிம்கள் / இந்தியத் தமிழர் / பறங்கியர் / மலாயர் / பிறர்]
6. தேசிய அடையாள அட்டை இலக்கம்:-
7. (அ) பிறந்த திகதி:-
   வருடம்:- மாதம்:- திகதி:-
   (ஆ) விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முடிவுத் திகதியன்று (15-10-1991) உமது வயது:-
   வருடம்:- மாதம்:- நாள்:-
8. கல்வித் தகைமைகள்:-
   (அ) க. பொ. த. (சாதாரணம்) / தே. பொ. க. சான்றிதழ் பரீட்சை:-

| பரீட்சையின் பெயர் மாதம், வருடம் | பரீட்சை நிலையம் | பாடம் | தரம் | சுட் இலக்கம் |
|---|---|---|---|---|
| [1] | | 1.<br>2.<br>3.<br>4.<br>5.<br>6.<br>7.<br>8. | | |
| [2] | | | | |

(ஆ) க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையின் விவரம்

| பரீட்சையின் பெயர் மாதம், வருடம் | பாடம் | தரம் | சுட் இலக்கம் |
|---|---|---|---|
| | 1.<br>2.<br>3.<br>4. | | |

9. பிறந்த இடமும், மாவட்டமும்:-
10. ஆரம்பக் கல்வி தொடக்கம் க. பொ. த. (சாதாரண) தே. பொ. க. சா. பரீட்சை வரை கல்வி கற்ற பாடசாலையின் பெயர்:-
11. தேர்தல் இடாப்பில் விண்ணப்பதாரரின் பெயர் பதியப்பட்டுள்ளதாயின் அத்தொகுதியின் பெயர்:-
12. ஏனைய தகைமைகள்:-
13. நீதிமன்றத்தில் ஏதாவது குற்றத்திற்காக உமக்குக் குற்றத் தீர்ப்பு அளிக்கப்பட்டதா? ஆம் / இல்லை (ஆம் என்றால் விவரங்களைக் குறிப்பிடவும்)
14. விண்ணப்பதாரியின் உறுதிமொழி:-
   (அ) எனது அறிவுக்கும், நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் இந்த விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்ட விவரங்கள் உண்மையானவையென்று உறுதிப்படுத்துகின்றேன்.
   (ஆ) என்னால் வெளிப்படுத்தப்பட்ட விவரங்கள் பொய்யானவையெனக் கண்டுபிடிக்கப்பட்டால் ஆட்சேர்ப்பின் முன் / ஆட்சேர்ப்பின் பின் நான் தகைமையற்றவராகக் கொள்ளப்படலாம்/சேவையிலிருந்து நீக்கப்படலாம் என்பதை நான் அறிவேன்.
   (இ) இப்பரீட்சையில் பிரமாணங்களுக்கமைந்து நடக்க நான் இணங்குகிறேன்.
15. காசுக்கட்டளை இலக்கம் (காசுக் கட்டளையை இணைக்கவும்).

திகதி:

..................................
விண்ணப்பதாரியின் ஒப்பம்;

விண்ணப்பதாரியின் ஒப்பம் சம்பந்தமான உறுதிமொழி

விண்ணப்பத்தை அனுப்பும் .................................... என்பவரைத் தனிப்பட்ட முறையில் எனக்குத் தெரியும் என்றும், என் முன்னிலையில் 1991 ................ ஆம் திகதி அவர் இதில் ஒப்பமிட்டார் என்றும் நான் உறுதிப்படுத்துகின்றேன்.

..................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.
பதவி முத்திரை.

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர்:-
பதவி:-
முகவரி:-
திகதி:- [வி-0578]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### கல்வி நிவாரணம் கிடைக்குமா?

மூன்று நாட்களுக்கு முன்னர் வெளிவந்த ஜி. சீ. ஈ. உயர்தர விசேட பரீட்சையின் பெறுபேறுகள் மிகவும் கவலை தருவனவாக உள்ளன. வடபகுதி மாணவர்களின் கல்வி வளம் குன்றிவிட்டது என்பதைப் பிரதிபலித்துள்ளன.

விசேட பரீட்சை நடக்குமா நடக்காதா என்ற நிச்சயமற்ற நிலையில் மாணவர்கள் அதற்குத் தயாராகாமல் சில நாட்களிலேயே பாடங்களைத் தீவிரமாக மீட்டல் செய்ய வேண்டியதாயிற்று.

அந்தப் பாதிப்பு ஒரு புறமிருக்க, மாணவர்கள் பாடங்களை மனம் ஒன்றிப் பயில முடியாதவாறு மிகப் பயங்கரமான, பதற்றமான புறச்சூழ்நிலை அப்போது நிலவியது.

எப்போதும் எந்த இடத்திலும் எறிகணைக் குண்டு வந்து விழலாம். எந்த வேளையிலும் விமானம் வந்து குண்டு வீசலாம் என்ற மனப் பயத்துடன் — பயப்பிராந்தியுடனேயே — மாணவர்கள் கல்வி கற்க வேண்டியதாயிற்று.

உடலையும், உயிரையும் பாதுகாக்க வேண்டும் என்ற தாக்கமுற்ற மனோநிலையில் இருந்தே அவர்கள் பாடங்களைப் பயின்றார்கள்; பரீட்சைக்கு ஆயத்தம் செய்தார்கள்.

அவை மட்டுந்தானா?

அரசு பொருளாதாரத்தடை விதித்ததால் தமிழ்ப் பிரதேசத்தில் எல்லா வீடுகளிலுமே பட்டினி நிலை நிலவியது; நிலவுகிறது. பல வீடுகளில் அரைப் பட்டினி. மிகப் பல வீடுகளில் முழுப்பட்டினி.

பட்டினி கிடந்து, போசாக்குக் குன்றி, உடல்வலு நொடிந்தால், மூளை முழுச் சக்தியுடனும் தொழிலியற்றி பாடங்களை எவ்வாறு கிரகிப்பது?

மேலும் பாடங்களைப் பயில்வதற்கு மின்சார வெளிச்சம் இல்லை. அது தான் போகட்டும். விளக்கை எரித்துப் படிப்பதற்கு மண்ணெண்ணெய் கூட கிடைப்பதில்லை. மாணவர்கள் இரவில் படிக்க வசதி இருக்கவில்லை.

இவ்வாறாகப் பலவகையான உடல் ரீதியான பாதிப்புகள், உளரீதியான பாதிப்புகளுடனேயே வடக்கு - கிழக்கில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் அதற்குத் தயார் செய்யவேண்டி இருந்தது.

பரீட்சைப் பெறுபேறுகள் முந்திய வருடங்களைவிட வீழ்ச்சி கண்டதற்கு இவையே பிரதான காரணங்கள்.

இத்தகைய நிலை அரசாங்கத்தினால் வேண்டுமென்றே உருவாக்கப்பட்ட ஒன்றாகும். தமிழர்களின் கல்வி வளத்தை நலியச் செய்ய வேண்டும் என்ற அரசின் பெருங்கொள்கையின் ஓர் அங்கமாகும்.

அரசு அவ்வாறில்லை என்று மறுக்குமானால் விசேட பரீட்சைக்குத் தோற்றிய வடக்கு-கிழக்கு மாணவர்களுக்கு நிவாரணம் வழங்கியாக வேண்டும்.

பல்கலைக்கழக அனுமதிக்கு, அகில இலங்கை ரீதியாக திறமை அடிப்படைக்கு ஒதுக்கப்பட்ட 30 சத வீதத்துக்கும் மாணவர்களைத் தெரிவுசெய்யும் போது, வடக்கு-கிழக்குப் பரீட்சார்த்திகளின் ஆகக் குறைந்த புள்ளி மட்டத்தைக் கீழே கொண்டுவர வேண்டும். அதாவது தென்னிலங்கைப் பரீட்சார்த்திகளின் ஆகக் குறைந்த புள்ளி மட்டத்திற்கு குறைவான புள்ளி நிர்ணயிக்கப்பட வேண்டும். அதுவே வடக்கு- கிழக்கு மாணவர்களுக்கு அரசு விளைவித்த பாதிப்புகளுக்குச் சரியான நிவாரணமாகும்.

## நல்லூரில் இன்று

யாழ்ப்பாணம், செப். 25

தியாகி திலீபனின் 4-ஆம் ஆண்டு நினைவாக நல்லூரில் நடைபெறும் நிகழ்ச்சியில் இன்று இரண்டாம் நாளாக உண்ணாநோன்பும், நினைவுக் கூட்டமும் நடைபெறும்.

காலை 8 மணிக்கு ஆரம்பமாகும் உண்ணாநோன்பு மாலை 4 மணிக்கு நிறைவு பெறும்.

மாலை 6 மணிக்கு ஆரம்பமாகும் நினைவுக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பிரதித்தலைவரும், மட்டு — அம்பாறை மாவட்டங்களின் அரசியற் பொறுப்பாளருமான திரு. கரிகாலன் சிறப்புரை நிகழ்த்துவார்.

விடுதலைப் புலிகளின் மக்களுறவுக் கொள்கை முன்னெடுப்புப் பிரிவு யாழ். மாவட்டப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி நிகழ்ச்சிக்குத் தலைமை வகிப்பார்.

விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் செல்வி. ஆர்த்தி, நல்லூர் வட்ட அவைத் தலைவர் திரு. கணபதிப்பிள்ளை, வலிகாமம் அரசியல், நிர்வாகப் பொறுப்பாளர் திரு. பாவேந்தன் ஆகியோர் நினைவுரை நிகழ்த்துவார்கள்.

இறுதியாக வில்லிசை, நாட்டிய நாடகம் போன்ற கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## திலீபன் நினைவுக் கூட்டங்கள்

தியாகி திலீபனின் நான்காம் ஆண்டு நினைவை முன்னிட்டு குடாநாட்டில் இன்று பின்வரும் இடங்களில் கூட்டங்கள் நடைபெறவுள்ளன:-

★ வலிகாமம் பகுதிக்கான கூட்டம் — சண்டிலிப்பாய் வட்ட அலவப் பிரிவில் உள்ள ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டரங்கில் — இரவு 7 மணிக்கு.

★ தீவகப் பகுதிக்கான கூட்டம் — புங்குடுதீவு வீராமலை இராஜேஸ்வரி வித்தியாலயத்தில் — மாலை 6-30 மணிக்கு.

★ வடமராட்சி பகுதிக்கான கூட்டம் — நெல்லியடி மாவீரர் கலை அரங்கில் — இரவு 7 மணிக்கு.

★ தென்மராட்சி பகுதிக்கான கூட்டம் — நாவற்குழி மகாவித்தியாலயத்தில் — இரவு 8 மணிக்கு.

### யாழ். இந்துவில்

யாழ். இந்துக் கல்லூரியில் இன்று தியாகி திலீபனின் நினைவு தின எழுச்சி விழா நடைபெறுகிறது.

காலை 8-30 தொடக்கம் மாலை 6-30 வரை நிகழ்ச்சிகள் நடைபெறும். மாலையில் பட்டிமண்டபம், வில்லிசை போன்றவையும் இடம் பெறும்.

### தொழில் நுட்ப கல்லூரியில்

கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி சரஸ்வதி மண்டபத்தில் நாளை காலை 9 மணி முதல் திலீபன் நினைவு நிகழ்ச்சிகள் நடைபெறும். [ஓ-5]

## மேலும் இருவர் உண்ணா நோன்பு

தியாகி திலீபன் நினைவாக நேற்று முன்தினம் மாலை முதல் நல்லூர் வீதியில் நீராகாரமற்ற உண்ணா நோன்பிருந்து வரும் காரைநகர் வாசியான திரு. ந. தருமராசாவுடன் மேலும் இருவர் சேர்ந்து கொண்டனர்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இ. மகாலிங்கம் என்பவர் நேற்று முன்தினம் மாலை தொடக்கமும், கல்வியங்காட்டைச் சேர்ந்த த. சத்தியலீலா என்னும் பெண்மணி நேற்றுக்காலை தொடக்கமும் உண்ணாநோன்பிருந்து வருகின்றனர். [ஓ]

## திலீபன்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள், சிறுவர்கள் என பல வயதினரும் உற்சாகத்துடன் கலந்து கொண்டனர்.

நேற்றுப் பகல் முழுவதும் பலர் கவிதாஞ்சலி நிகழ்த்தினர்.

நல்லூர் வீதிப் பகுதிகள் எங்கும் அலங்கரிக்கப்பட்டு திலீபனின் உருவப்படங்கள் வைக்கப்பட்டுள்ளன. அப்பகுதி எங்கும் சிவப்பு— மஞ்சள் கொடிகள் வண்ணமுற பறந்த வண்ணம் இருந்தன.

நேற்று மாலையளவில் நினைவுக் கூட்டம் ஆரம்பமானது. இரவு அப்பகுதி எங்கும் மின்விளக்குகள் மின்னின.

அதைத் தொடர்ந்து அங்கு கலை நிகழ்ச்சிகள் நடந்தன.

நல்லூரில் தொடர்ந்து இன்னும், நாளையும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறும்.

### தியாகத் தேன்: 11

பதினோராம் நாளில்
பதிலொன்றுங் கூறாமல்- எமனின்
பதிவுக்குக் காத்திருந்தாய்...
தன்முடிவை எண்ணாமல்
மண்விடிவைப் பார்த்திருந்த
மறத் தமிழா திலீபா!

— வாஞ்சிநாதன்.

(தியாகி திலீபன் நினைவாக)

## சட்டத்தரணிகளுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், செப். 25

யாழ். மாநகரசபைப் பகுதி தவிர்ந்த ஏனைய இடங்களில் உள்ள சகல சட்டத்தரணிகளையும் இம்மாதம் 27 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு யாழ் பிரதேச காவல்துறை பணிமனையில் சமூகம் அளிக்குமாறு காவல்துறை பொறுப்பதிகாரியினால் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

## ஒத்திவைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், செப். 25

எதிர்வரும் 29 ஆம் திகதி காலை 9 30 மணிக்கு நடைபெற இருந்த யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் விசேட பொதுக் கூட்டம் அடுத்த மாதம் 20 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (த)

## வல்வையில் ஷெல் தாக்கு

யாழ்ப்பாணம், செப். 25

வல்வெட்டித்துறை கடற்பரப்பில் — பீரங்கிப் படகில் இருந்து நேற்றுக் காலை ஸ்ரீலங்காப் படையினர் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் குடியிருப்புகள் சில சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ)

## மணலாறுப் போரின்.....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பாளர் திரு. ரூபன்.

தியாகி திலீபனின் நான்காம் ஆண்டு நினைவு நிகழ்வுகளின் இறுதி மூன்று நாள் நிகழ்ச்சிகள் நேற்று நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றலில் ஆரம்பமாகின.

அங்கு சிறப்புரை ஆற்றுகையிலேயே திரு. ரூபன் முன் கண்டவாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியின் வலிகாமம் பொறுப்பாளர் செல்வி மலர்க்கொடி நிகழ்ச்சிக்கு தலைமை வகித்தார்.

திரு. ரூபன் தமது பேச்சில் மேலும் குறிப்பிட்டதாவது:-

வட - தென் தமிழீழத்தைப் பிரிப்பதற்காக, மணலாறில் இராணுவ முகாம் அமைத்து சிங்களக் குடியேற்றங்களை மேற்கொண்டு வந்த சிங்கள அரசின் உச்சக்கட்ட நடவடிக்கையே இப்போதைய போர். இரு பிரதேசங்களுக்கும் இடையேயான உறவுகளை, இணைப்புகளை முற்றாக அறுத்துவிடும் நோக்குடன் இன்று அரசினால் இப்போர் தொடுக்கப்பட்டுள்ளது.

ஆனையிறவுப் போரின் போது காட்டிய ஆர்வத்தை மணலாறுப் போரில் மக்கள் காட்டவில்லை. வட தமிழீழமும், தென் தமிழீழமும் துண்டிக்கப்பட்டு விட்டால், வட மீழமும் இராணுவத்தினரின் நடவடிக்கைக்கு உட்படும் ஆபத்து உண்டு.

எமது பிரச்சினைகளுக்கு பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காண முடியாது என்பதை எமது கடந்த கால வரலாறுகளில் இருந்து காண முடியும்.

ஆயுதப் போரில் நாம் ஈடுபட முன்னரும், பின்னரும் வந்த பேச்சுவார்த்தைகள் என்ன பயனைத் தந்தன? இதனை உணர்ந்து ஆயுதப் போராட்டம் வெற்றி பெற — எமது தாயகம் மீட்கப்பட — சகலரும் தமது பங்களிப்பை வழங்க வேண்டும் — என்று கேட்டுக் கொண்டார்.

மக்கள் விடுதலை முன்னணியின் மக்களுறவு கொள்கை முன்னெடுப்புப் பிரிவின் பொறுப்பாளர் திரு. பரா பேச்சையில் கூறியதாவது:

அரசாங்கம் விதித்த பொருளாதாரத் தடையால் தமிழ் மக்கள் சொல்லொணாக் கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள், எனினும் அந்தப் பெரும் கஷ்டங்களின் மத்தியிலும் தியாகி திலீபனின் நினைவு நிகழ்ச்சிகளில் அதிக எண்ணிக்கையான மக்கள் கலந்து கொள்கின்றனர்.

தமிழ் மக்கள் தியாகி திலீபனைக் கௌரவிக்க முன்நிற்கிறார்கள். தமிழீழப் போராட்டத்தில் தாமாகவே பங்கு கொள்கிறார்கள் என்பதையே கடந்த பத்துத் தினங்களாக திலீபன் நினைவுக் கூட்டங்களுக்கு வரும் மக்கள் கூட்டம் நிரூபிக்கிறது.

இந்தியா உண்மையாகவே தமக்கள் நண்பன் அல்ல என்பதை தமிழ்மக்கள் நன்றாகப் புரிந்து கொண்டுள்ளார்கள். ஈழத் தமிழ் மக்கள் இந்தியாவைத் தமது தாய் நாடு என்று கருதி வந்தது உண்டு. அது தப்பான எண்ணம் என்பதை எடுத்துக்காட்டி அந்த நிலைப்பாட்டை மாற்றியவன் எங்கள் திலீபன் - என்று சொன்னார்.

விடுதலைப் புலிகள் மூத்த உறுப்பினர் திரு தேவர், மகளிர் அமைப்பைச் சேர்ந்த செல்வி மாலினி, மாணவர் அமைப்பைச் சேர்ந்த நாவண்ணன் ஆகியோரும் உரையாற்றினர். (அ-3)

## ஜனாதிபதியிடம் மன்னிப்பு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

விடம் நேரில் கேட்டுக்கொண்டார்.

ஜே. எம். பி. க்களின் புரளித்தனமான செய்கைகள் இவை என்றும், தாம் இவற்றைப் பொருட்படுத்தவில்லை என்றும் ஜனாதிபதி சபாநாயகரிடம் சொன்னார்.

இந்தச் சம்பவம் குறித்து ஜனாதிபதி உரை முடிந்த பின்னர் சபாநாயகர் பகிரங்கமாக கவலை வெளியிட்டார்.

"சபையின் கௌரவத்தை மதித்து நடப்பதாக எதிர்க்கட்சியினர் எனக்கு உறுதியளித்திருந்தனர். ஆனால் அவர்கள் சபையின் கௌரவத்தைப் பேணத் தவறிவிட்டார்கள். இதற்காக நான் கவலையடைகிறேன்'' — இப்படிச் சபாநாயகர் சொன்னார். [உ-எ]

## குற்றச்சாட்டுகளை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஒழித்துக் கட்டுவதற்கான ஒரு சதித்திட்டம்.

சமாதான வழிகள் மூலம்— பிரச்சினைகளுக்குப் பேச்சுவார்த்தை மூலம் — தீர்வு காண்பதே அரசின் கொள்கையாகும்.

வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டிய கடப்பாடு அனைவருக்கும் உண்டு.

யுத்தத்தில் அனைவரும் தோல்வியே அடைகின்றார்கள். சமாதானத்திலேயே அனைவரும் வெற்றியடைகிறார்கள்.

கலந்தாலோசனை, கருத்துடன்பாடு, நல்லிணக்கம் ஆகியன மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவே நான் எப்போதும் விரும்புகின்றேன்.

பேச்சுவார்த்தைகளுக்கு வரும்படி சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அரசாங்கம் மீண்டும் அழைப்பு விடுக்கிறது.

### மாற்றம் தேவை

நீண்ட காலமாக இருந்து வரும் பாகுபாடு. சந்தேகம் ஆகியவற்றை நீக்குவதற்குத் தீர்க்கமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

சமூகத்தின் சகல பிரிவினருக்கும் நீதியை வழங்கி, தேவையான மாற்றங்களைக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை எடுக்க அரசாங்கம் தயாராக இருக்க வேண்டும். இந்த வகையில் தான் ஐக்கிய இலங்கையைக் கட்டி எழுப்ப முடியும். இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண நாடாளுமன்ற தெரிவுக்குழு நியமிக்கப்பட்டிருக்கிறது.

### பண்டாவுக்கு நேர்ந்தது

சட்ட விரோதமான முறையில் நான் ஒருபோதும் காணியைக் கொள்வனவு செய்தது இடையாது. குடியுரிமையை இழக்கும் ஆபத்தை நான் ஒருபோதும் எதிர்நோக்கவில்லை.

ஜனாதிபதி ஆணைக்குழு முன் தோன்றுவதற்கு நான் ஒருபோதும் மறுத்தது கிடையாது.

காலஞ்சென்ற பிரதமர் எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்காவை அவரது கொள்கைகளை அமுல் செய்ய விடாது ஒரு சில அதிருப்தியாளர்கள் தடுத்தனர். ஈற்றில் அவரையே படுகொலை செய்தார்கள் இதனை நான் இங்கு ஞாபகப்படுத்துகின்றேன்.

— இப்படி ஜனாதிபதி சொன்னார். [ஈ-எ]

## 21 இந்திய மீனவர்களும்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கப்பலில் ஏற்றிய படையினர், மீனவர்களின் படகுகளை நடுக்கடலில் விட்டுவிட்டு தமது கப்பலை தொடர்ந்து செலுத்தினராம்.

கப்பலில் ஏற்றப்பட்ட மீனவர்கள் கப்பலில் வைத்தே விசாரிக்கப்பட்டு படையினரால் தாக்கப்பட்டனர்.

பின்னர் துப்பாக்கி முனையில் மீனவர்களைக் கடலில் குதிக்குமாறு படையினர் பணித்தனர். குதிக்காவிடில் சுடப் போவதாகப் பயமுறுத்தினர்.

தங்களுக்கு நீந்தத் தெரியாததால் கடலில் தள்ள வேண்டாம் என்று மீனவர்கள் கெஞ்சினர். ஆனால் படையினர் ஒவ்வொருவராகத் தூக்கி அவர்களைக் கடலில் தூக்கி எறிந்தனராம்.

கடலில் வீசப்பட்ட மீனவர்களில் 21 பேர் மூன்று மணி நேரம் நீந்தி, வெள்ளிக்கிழமை காலையில் நெடுந்தீவுக் கரையை அடைந்தனர்.

அங்கு விடுதலைப் புலிகள் அவர்களை ஆதரித்து நான்கு நாட்கள் வைத்திருந்த பின்னர் நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணத்துக்கு கூட்டி வந்தனர்.

இவர்களில் இருபது பேர் தற்போது யாழ்ப்பாணம் ஹோட்டல் ஒன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். கடற்படைத் தாக்குதலினால் காயமுற்ற மீனவர் ஒருவர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

காணாமற்போன மூவரும் நீந்தத் தெரியாதவர்கள் என்றும்—

அதனால் அவர்கள் கடலில் மூழ்கி உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் —

காணாமற்போன இந்த 24 மீனவர்களையும் இந்தியக் கடற்படையினர் தேடி வருவதாக தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா அறிவித்திருந்தது தெரிந்ததே.

கடம்புரியைச் சேர்ந்த கட்டையன் பால்ராஜ் (வயது 22) என்ற மீனவரே ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

பாதுகாப்பாக யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் ஏனைய இருபது பேரின் பெயர் விவரங்களும் வருமாறு:-

ஆண்டி இராசேந்திரம் [வயது 26], முக்கையா முனியாசமி [வயது 31], ஆறுமுகம் கறுப்பையா [வயது31], சுந்தரமூர்த்தி இராமலிங்கம் [வயது 42], ஆரோக்கியம் அந்தோனி [வயது 30,] அந்தோனி ஷேசையா [வயது40], சர்க்கரை செல்வம் [வயது23], தேவசகாயம் பலிப்பிள்ளை [வயது 40], மணி மாணிக்கம் [வயது 36], காளிமுத்து ராமு [வயது 32], கறுப்பையா மூர்த்தி [வயது 32], கறுப்புசாமி முத்துராமலிங்கம் [வயது 33], கோவிந்தசாமி மூர்த்தி [வயது 38], ஜெகாமுத்துசாமி அருச்சுனன் [வயது 22], குருசாமி வேலு [வயது 26], சோலையப்பன் தங்கபாண்டி [வயது 22], சித்தன் மாரி [வயது 20], நாகலிங்கம் இல்லைமுத்து [வயது 27], பொன்னாண்டி ராமு [வயது 27], ஆண்டி கருணை [வயது 22].

காணாமற்போன மூவரின் பெயர் விபரம் வருமாறு:- கட்டையன் கோவிந்தராஜ [வயது 27], பாண்டி [வயது 38], கறுப்புச்சாமி [வயது 35]. (உ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
(O/L) வகுப்புகளிற்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

Dec. பிரிவு 4

**0/L DAY CLASSES**

பிரிவு 3

**EVENING CLASSES**

பிரிவு 1

PAPER CLASSES

(DAY & EVENING)
8-30 — 1-30   4-15 — 6-15

**ஆரம்பம்: 30-09-1991**

மு. குறிப்பு: (1) கடமை, கட்டுப்பாட்டுடன் நடத்தும் ஒரே நிறுவனம்.
(2) தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் ஒருங்கிணைந்து போதிக்கப்படுகிறது.

(இ-0534)


## 61 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**மேஜர் குகதாஸ்**

**இராசரத்தினம் இராஜேந்திரன் (இந்திரன்)**

வீரஜனனம்: 26 - 09 - 1964  வீரமரணம்: 27 - 07 - 1991

உரும்பையூர் பெற்ற திருமகனே!
வீனர் கொடுமை சகியாமல் வீரமுடன்
வீறுகொண்டெழுந்து மறவர் படையாம்
தமிழ்ப் படையான புலிப்படையுடன் சேர்ந்து
களம் பல கண்ட வேங்கையே! உன் உடம்பு
பூராவும் விழுப்புண்கள் ஏற்று இனிமேல்
விழுப்புண்கள் ஏற்க முடியாத நிலையிலும்
உன வீரத்தைக் காட்ட ஆணையிறவு
தகர்த்து அரிய மண்தனை மீட்க என்று
களம் புகுந்த வேங்கையே! நீ திரும்பி வராமல்
மாற்றானை கதிகலக்கி பெற்றவரையும் உற்றவரையும்
ஊராரையும் கண்கலங்க விட்டு விட்டு
மீளாத் துயில் கொண்டாயோ பெருமகனே!
எமது உயிர் உள்ளவரையும் உன் நினைவில்
வாடுமோடா!

உமது ஆத்மா சாந்தியடைவதாக!

இன்று நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உரும்பராய் வடக்கு,
உரும்பராய்.
-குடும்பத்தினர்,
(18237)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன்(பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 25 - 09 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## பேக்கரி சங்கம் அறிவித்தல்

மாவுக்கு அனுமதி பெற்ற பேக்கரி உரிமையாளர் கள் பணத்துடன் இன்று [25 - 9 - 91] காலை 9.00 மணிக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்குச் சமுகமளிக்கவும்.

செயலாளர்
**மணி பேக்கரி**
பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு, நல்லூர். (18242)

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் யாழ். கல்விக் கோட்டம்

நடத்தும்

தியாகச்சுடர்

## திலீபன் நினைவு விழா

காலம்: **25 - 09 - 1991**
புதன்கிழமை பி. ப 4 03 மணி

இடம்: யாழ். வைத்தீஸ்வர வித்தியாலயம், யாழ்ப்பாணம்.

நிகழ்ச்சி நிரல்

1. மக்கள் அஞ்சலி
யாழ். கல்விக் கோட்ட மாணவர்கள்.
2. பட்டிமன்றம்:
''இன்றைய போராட்டத்திற்கு உறுதுணை சேர்ப்பதில் விஞ்சி நிற்பது கல்வியா? வீரமா''?
3. தியாகி திலீபனின் நினைவுரைகள்
(1) தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி உறுப்பினர்.
(2) யாழ். கல்விக் கோட்ட மாணவர்கள்- (த. க. நி. ஒ.)
4. கலைநிகழ்ச்சி
''இந்த மண் எங்களின் சொந்த மண் புகழ்''
சாந்தன் குழுவினர் திலீபன் நினைவாக வழங்கும்

**விடுதலை இராகங்கள்**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
(18243)

## ஓராண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்: 08 — 11 — 1968



ஆழியின் அடியில்: 06 — 10 — 1990

**செல்வி சதாசிவம் யோகேஸ்வரி**
(சுரபி)

ஆண்டு ஒன்று மறைந்ததுண்மை
ஆனால் உன் நினைவுகளோ...?
கல் மேல் எழுத்தாகிக்
கரை காணாக் கடலாகி
நெஞ்சில் புரண்டு நிதம்
தேடிய பெரும் வேதனையை
எம்மில் எழுப்புதம்மா
இரவு பகலாக......
நினைந்து. நினைந்து உருகி
நீறாகிப் போகின்றோம்... சுரபி!

நினைவு மறவாத நெஞ்சங்கள்:
அப்பா, அம்மா, அத்தான், அக்கா,
தம்பி, உறவினர்கள், நண்பர்கள்.

51/1, இராசாவின் தோட்ட வீதி,
யாழ்ப்பாணம். [18239]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணலாறுப் பகுதியில் நேற்று உக்கிரச் சண்டை

மணலாறு, முல்லைத்தீவுப் பகுதி காடுகளில் நேற்று உக்கிரச் சண்டை இடம்பெற்றதாக கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன.

நேற்று முன்தினம் நடந்த சண்டையில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார் என்றும், ஓர் அதிகாரி உட்பட 29 படையினர் படுகாயமடைந்தனர் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

புலிகளின் மைக்கேல் முகாமைச் சுற்றி கடும் சண்டை நடந்து வருவதாகவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில்—

நித்திகைக்குளம் காட்டுப் பகுதியில் நடந்து வரும் சண்டையில் ஸ்ரீலங்காப் படையினருக்கு அதிக இழப்பு ஏற்பட்டு வருவதாகவும்—

அதனால் படையினரின் முன்னேற்றத்தில் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. [(ஓ-எ-15]

### நாளை விடுமுறை

யாழ்ப்பாணம், செப். 25

தியாகி திலீபனின் நான்காம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி நாளை, சகல அவசர அனுமதி வழங்கும் அலுவலகங்களுக்கும் விடுமுறை நாளாகும் என்று போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவு அறிவித்துள்ளது. (ஒ)


## வெளிவாரிப் பட்டப் படிப்புக்கள்

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்துக்கான....

1st in Com. விரிவுரைகள்
ஆரம்பம்: 05-10-1991
காலை 8 மணி

**G. A. Q.** விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.

பேராதனைப் பல்கலைக் கழகத்துக்கான

**ஆண்டு 91, 92**

இதற்கான G. A. Q., G. S. Q.
விரிவுரைகள் ஆரம்பம்: 05-10-1991
காலை 10 மணி

**புதிய உயர் கல்லூரி**
*(New College of High Studies)*
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(இ-0654)


## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்: 10 — 11 — 1975



அந்தியர் அழிப்பில்: 25 — 09 — 1989

செல்வன்
**நடராஜா செல்வக்குமார்**
(யா/புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை மாணவன்)

எங்கள் தவச்செல்வமாக, குடும்ப தீபமாக இருந்த எம் செல்வமே! பல்கலைக்கழகம் புகுவாய் என நாம் கண்ட கனவு காலம் பதில் சொல்லும் எனக் காத்திருந்தோம்! ஆனால் நாம் கண்ணீர் தான் கண்டோம்! இப்படியான நிலையில் எங்களை கலங்க விட்டு பிரிவாய் என்று கனவில் கூட எண்ணி இருக்கவில்லையே!

உமது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உமது பிரிவால் வாடும்,
குடும்பத்தினர்.

சங்கானை கிழக்கு,
பண்டத்தரிப்பு.
(18177)